1990 மே, 2]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகள் கடந்த காலங்களிலே இருந்தன. ஆனால் நம்முடைய இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகு, அந்தந்தத் துறையினுடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைனய பெரு முயற்சியால், தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, சிறப்பான பணி யில் இருக்கிற அத்தனை ஆசிரியர் பெருமக்களும், ஆசிரியர்க ளாகப் பணி செய்ய ஆவன செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடுதுறை அரசு மருத்துவ மனை.

*3139. **திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், ஆடுதுறை அரசு மருத்துவமனை அபாயகரமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் கட்ட அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் இல்லை. பழுதுபார்த் செப்பனிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேற்படி மருத்துவமனை இடிந்து அங்கு உள் நோயாளிகள் அனுமதிக்கப்படாத சூழ்நிலை உள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தற்போது ஒரு புதிய மருத்துவ மனை கட்டப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான படுக்கைகள் போன்ற உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி நோயாளிகள் பகுதியைச் சீர் செய்யும் வகையில், பழுதுபார்த்து முடியும்வரை உள் நோயாளிகள் பகுதியில் பாதியை வெளிநோயாளி பகுதியாக இயங்க வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பழுது பார்க்க 2 இலட்சம் ரூபாய் செலவாகும் என கணக்கிடப்பட்டு அதற்காக பொதுப் பணித்துறை மூலமாக அந்தப் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடத்தைச் சீர் செய்கின்ற பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைக்கு நாள்தோறும் 500-க்கு மேற்பட்ட புறநோயாளிகள் வருகிறார்கள், எனவே, அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துகின்ற வகையில் லேப் பெசி லிட்டீஸ், அதுபோன்று எக்ஸ்பெர்ட் போன்ற மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதிநிலையைப் பொறுத்து, இதுபோன்ற திட்டங்களை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்ணீர் வழங்குதல்.

*3177 திரு. ஏ. கோதண்டம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா ?

(அ) திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வல்லம் மற்றும் வடகால் ஆகிய கிராமங்களுக்கு தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வல்லம் மற்றும் வடகால் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் நீர் வற்றி விட்டதால் திட்டம் முடிக்கப்பட்டும் மக்களுக்கு பயனளிக்க முடியவில்லை. கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற தேவையான ஊற்றளவுள்ள மாற்று ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9-45 மணி

திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வல்லம் மற்றும் வடகால் ஆகிய கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் மூலக் கேள்வி. துணைக் கேள்வி ஏதேனும் இருக்கிறதா ?

திரு. ஏ. கோதண்டம் : இல்லை.